11 JUL 2022

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியிடை காலமான அரசு ஊழியர் திரு.P.கிருபாகரன் என்பவரது மகன் - திரு.கி.சூரியபாபு என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (ப) எண்.135

நாள்: 04. 07. 2022
சுபகிருது ஆண்டு
ஆனி 20- ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.3, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள்.04.02.2021.
3. ஆதிதிராவிட நல ஆணையரின் கடிதம் ந. க. எண். இ6/23038/2020, நாள்.25.03.2022.

********

## ஆணை:

மேலே மூன்றில் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கோட்டம், பூந்தமல்லி அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் போதகக் காப்பாளராக பணிபுரிந்த திரு.பா.கிருபாகரன் என்பவர் கொரோனா தொற்றால் 02.08.2020 அன்று மரணமடைந்ததன் காரணமாக அவரது மகனான திரு.கி.சூரியபாபு என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் பணி நியமனம் வழங்கப்பட்டு, 08.02.2021 முற்பகல் முதல் ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

த.பி.பா.,

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு உரிய ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் 08.02.2021 அன்றைய தேதியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு.கி.சூரியபாபு என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 08.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.9297/LG1/2022, நாள்.24.05.2022 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண்.2505170/G2/2022, நாள்.24.06.2022 -இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**

திரு.கி.சூரியபாபு, த/பெ.திரு. P.கிருபாகரன் (late).
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை – 600 005.
(ஆதிதிராவிடர் நல ஆணையர் வழியாக)
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
மாவட்டக் கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை - 600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 008.

<u>நகல்:-</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,

முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

04/07/2022

பிரிவு அலுவலர்.

4/7/2022

மே.கு.எண். இ6/23038/2020, நாள். 14.10.2022.

திருமதிக்கு சார்பு செய்தல்

PERSONAL ASSISTANT TO
The Director of Adi Dravidar
Welfare Department,
Chennai-5.

4/4

பெறுநர்.

திரு. சித்திரியபாபு,

இளநிலை உதவியாளர்,

ஆதிதிராவிடர் நல இயக்ககம்,

சென்னை-5.

14/10/22